# மற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை

## நாவன்மைப்போட்டி - 2020

## போட்டி நடைபெறும் திகதி 07.03.2020 சனிக்கிழமை காலை 9.30 மணி

வயது எல்லைகள்

| இல | பிரிவு / வயது | தலைப்பு |
|---|---|---|
| 1 | 5 வயதிற்குட்பட்டோர் (31.08.2014 பின் | நான் விரும்பும் பறவை |
| 2 | 5 - 6 (01.09.2013 - 31.08.2014) | புலவர் ஔவையார் |
| 3 | 6 - 7 வயது (01.09.2012 - 31.08.2013) | பொன்மொழிகள் |
| 4 | 7 - 8 வயது (01.09.2011 - 31.08.2012) | ஓழக்கம் |
| 5 | 8 - 9 வயது (01.09.2010 - 31.08.2011) | நன்றி |
| 6 | 9 -10 வயது (01.09.2009 - 31.08.2010) | தமிழும் கலையும் நம்மிரு கண்கள் |
| 7 | 10 -12 வயது (01.09.2007 - 31.08.2009) | சுப்பிரமணிய பாரதியார் |
| 8 | 12 -14 வயது (01.09.2005 - 31.08.2007) | தன்னம்பிக்கை |
| 9 | 14 -16 வயது (01.09.2003 - 31.08.2005) | தமிழ்ப்பண்பாடு |
| 10 | 16 (01.09.2003 முன் பிறந்தோர்) | இயற்கை எனும் இறைவனின் கொடை |
| 11 | பெற்றோர்கள் | சிக்கனமும் சேமிப்பம் |

நிபந்தனைகள்:-

1. மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கு கொள்ளலாம்.
2. மாணவர்கள் சரியான வயதெல்லைப் பிரிவில் பங்கு கொள்ள வேண்டும்.
3. பங்கு பெறும் மாணவர்கள் கொடுக்கப்படும் பேச்சுக்களில் குறைந்தது 50 வீதமாவது பேசினால் அவர்களுக்கு ஊக்குவிக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
4. முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழாவின்போது பரிசில்கள் வழங்கப்படும்.
5. இப்போட்டியில் பெறும் புள்ளிகள், வருட முடிவில் சிறந்த மாணவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வில் சேர்த்துக் கொள்ளப்படும்.
6. போட்டிகள் காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகும்.
7. கீழே குறிப்பிட்டுள்ளபடியே புள்ளிகள் வழங்கப்படும்.
8. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
9. மாணவர்கள் தங்கள் பெயர்களை 29.02.2020 சனிக்கிழமைக்கு முன்பு தலைமை ஆசிரியரிடம் கொடுக்கவேண்டும்.
10. இப்போட்டிகளில் பெற்றோர்களும் பங்குபெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கும் பரிசில்கள் உண்டு. பெற்றோரகள் கொடுக்கப்படும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றைப் பற்றிப் பேசுதல் வேண்டும். அத்துடன் அவர்களுடைய பிள்ளைகளின் இல்லத்திற்கு புள்ளிகள் வழங்கி அதிக புள்ளிகள் பெறும் இல்லத்திற்கு பரிசளிப்பு விழாவில் வெற்றிக் கேடயம் வழங்கப்படும்.
11. மேலதிக உதவிகளை தலைமை ஆசிரியரிடம் அல்லது ஆளுநர்சபையினரிடம் பெற்றுக்கொள்ளலாம்..

நன்றி

போட்டி மதிப்பீட்டுப் புள்ளிகள்

| | | |
|---|---|---|
| மனனம் | - | 30 |
| உச்சரிப்பு | - | 25 |
| தெளிவு | - | 25 |
| தொனி | - | 10 |
| பொருத்தமான உடல் அசைவு | | 10 |

## நான் விரும்பும் பறவை கிளி

5 வயதிற்குட்பட்டோர் (31.08.2014 இற்குப் பின் பிறந்தோர்)

எல்லோருக்கும் எனது அன்பான வணக்கம்.
நான் இன்று ‘‘நான் விரும்பும் பறவை கிளி ’’ பற்றி பேச வந்துள்ளேன்.

கிளி ஓர் அழகான பறவை.
பச்சைக் கிளி, பஞ்ச வர்ணக்கிளி உட்பட கிளிகளில் பல வகை உண்டு.
கிளி பழங்களை உண்ணும். அதிலும் அது கொவ்வைப் பழத்தையே விரும்பி உண்ணும்.
தன் காலால் உணவை வாய்க்கு கொண்டு வந்து உண்ணும் பறவை கிளி.
தலையை திருப்பாமலேயே பின்புறம் பார்க்கும் ஒரே பறவை கிளியாகும்.
எனக்கு மட்டும் அல்ல எங்கள் வீட்டிலும் எல்லோருக்கும் விருப்பமான பறவை கிளி. என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி வணக்கம்.

## புலவர் ஔவையார்

5 - 6 வயது (01.09.2013 - 31.08.2014)

எல்லோருக்கும் எனது அன்பான வணக்கம்.
நான் இன்று “ புலவர் ஔவையார் ” பற்றி பேச வந்துள்ளேன்.

ஔவையார் ஒரு தமிழ் பெண் புலவர். சங்கத் தமிழ் மூன்றையும் பிள்ளையாரிடம் வரமாகப் பெற்றவர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை போன்ற பல அற நூல்களை எமக்கு வரமாகத் தந்தவர். அதியமானிடம் நெல்லிக் கனி பெற்று உண்டு, நீண்ட காலம் உயிர் வாழ்ந்தவர். இருந்தாலும் ஔவையார் என்றதும் சுட்டப்பழம் சுடாத பழம் என்ற நாவற்பழம் மட்டும் தான் எமக்கு நினைவில் வரும். இவரை எல்லோரும் ஔவைப்பாட்டி ஔவைக்கிழவி என்று செல்லமாக அழைப்பார்கள்.

ஔவைக் கிழவி நம் கிழவி அமிழ்தின் இனிய சொற்கிழவி' என சிறுவயதில் படித்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா. ஆம், உங்கள் பிள்ளைகளுக்கு ஔவைப்பாட்டியின் அறநெறிகளைக் கூறி வழி நடத்துங்கள்.

நன்றி. வணக்கம்.

## பொன்மொழிகள்

6 - 7 வயது (01.09.2012 - 31.08.2013)

எல்லோருக்கும் எனது அன்பான வணக்கம்.
நான் இன்று "பொன்மெழிகள்" பற்றி பேச வந்துள்ளேன்.

எம்மை நல்வழியில் வாழவைக்க எம்முன்னோர்கள் எழுதி வைத்த நற்கருத்துக்கள் நிறைந்த சுருக்கமான சொற்றோடர்கள் பொன்மொழிகளாகும். சில உதாரணங்களை இங்கு கூறுகிறேன். கடுமையான உழைப்பும் கல்வி அறிவும் ஒரு சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாதது. அறிஞர்கள், தலைவர்கள் அறிவாளர்கள் ஆயிரக்கணக்கான பொன்மொழிகளை எமக்காக அருளிச்சென்றுள்ளார்கள். நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் மண்டியிடமாட்டான் அறிவும் ஆராய்ச்சியும் எல்லைகளற்றவை. தாய் தந்தையை விட உயர்ந்த தெய்வம் எதுவுமில்லை. இந்தியாவின் ஜனாதிபதி அப்துல் கலாம் மாணவர்களை இலட்சியக் கனவு காணுங்கள் என்று கூறிச்சென்றார். எதிர் காலத்தைத் திட்டமிடுங்கள். ஏனெனில் உங்கள் வாழ்க்கையில் மீதமுள்ள காலம் அதுதான். இது திட்டமிடுதலின் முக்கியத்தைக் கூறுகிறது
அறிவு இல்லாத கண்ணியம் பலவீனமானது. பயனற்றது. கண்ணியமில்லாத அறிவு ஆபத்தானது. அஞ்சத்தக்கது. அதாவது அறிவுடையவர் கண்ணியத்தைக் காட்டாவிட்டால் அது பயனற்றது மாத்திரமன்றி அஞ்சத்தக்கதும் ஆகும். எனவே நாம் நல்ல பொன்மொழிகளை அறிந்து அதன் படி வாழ்வோம் என்று கூறிக் கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி. வணக்கம்.

## ஒழுக்கம்

7 - 8 வயது (01.09.2011 - 31.08.2012)

இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்.
நான் இன்று உங்கள் முன்னால் பேச எடுத்துக்கொண்ட விடயம் "ஒழுக்கம்"

ஒழுக்கம் விழுப்பந் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

இவை திருக்குறளில் கூறப்ப ட்டவை. ஒழுக்கமாக வாழ்வதே ஒருவரில் நல்வாழ்வுக்கு விதை போன்று அமையும். தீயொழுக்கம் என்றும் துன்பத்தையே தரும். நல்ல ஒழுக்கங்களைக் கடைப் பிடிக்கும் ஒருவர் சரி எது, தவறு எது என்பதைச் சரியாகப் புரிந்து வைத்திருப்பார். மனம் போன போக்கெல்லாம் போகமாட்டார். உண்மை பேசுதல், நேர்மையாக இருத்தல், அன்பு காட்டுதல், புறங்கூறாமை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை நல்ல ஒழுக்கங்கள். மாணவர்களாகிய நாங்கள் கல்வியறிவோடு ஒழுக்கத்தையும் இருகண்களாக கடைப்பிடித்து பயின்று சிறப்புறவேண்டும். கற்றதோடு மட்டும் நின்று விடாமல் ஒழுக்கத்தை காலம் தோறும் பேணிப்பாதுகாக்க வேண்டும். ஒழுக்கம் என்றால் சாட்சிகள் இல்லாத இடத்திலும் தவறு செய்யாமல் நேர்மையாக நடப்பதே ஆகும்

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். எனவே நல்ல ஒழுக்கங்களை சிறுவயதிலிருந்தே பழகி வருவோம். சமுதாயம் போற்றும் மாமனிதர்களாக வாழ்வோம். வாழ்ந்து காட்டுவோம் என்று கூறிக்கொண்டு விடை பெறுகிறேன்

நன்றி. வணக்கம்.

## நன்றி

8 - 9 வயது (01.09.2010 - 31.08.2011)

அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்.
நான் இன்று உங்கள் முன்னால் பேச எடுத்துக்கொண்ட விடயம் " நன்றி "

ஒருவர் எமக்கு உதவி செய்யும் போது உதாரணமாக பாடம் கற்பிக்கும் ஆசிரியர், வைத்தியம் பார்க்கும் வைத்தியர், பாதுகாப்பை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் ஏன் எமது பெற்றோர் உறவினர் நண்பர் எனச் சகலரும் எமக்கு பொருள் உதவியோ, சரீர உதவியோ செய்யும்போது நன்றி என்று கூறுகின்றோம்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு என்கிறார் திருவள்ளுவர்.

செய்நன்றி என்றால் என்ன என்று பார்ப்போம்.
பலர் பல உதவிகளை எமக்குச் செய்வார்கள். எமக்கு தேவை ஏற்பட்டு அதனைச் செய்யும் படி ஒருவரைக் கேட்டு, அவரும் அதனைச் செய்து எமது தேவையை பூர்த்தி செய்யலாம். அந்த உதவிகளை நாம் என்றும் மறக்கலாகாது. இது தான் செய்நன்றி. செய்நன்றி மறப்பவர்களுக்கு உய்வில்லை என்கிறார் திருவள்ளுவர்.
நாய் ஒரு நன்றி உள்ள மிருகம். அது தனது வாழ்நாள் முழுவதும் நன்றியை மறக்காமலே வாழும். தென்னை மரம் அதன் வேருக்கு நாம் ஊற்றிய நீரை இளநீராகத் திருப்பித் தருகிறது. இறுதியாக நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி. வணக்கம்.

## தமிழும் கலையும் நம்மிரு கண்கள்

9 - 10 வயது (01.09.2009 - 31.08.2010)

எல்லோருக்கும் வணக்கம். இன்று நான் உங்கள் முன்னிலையில் பேச எடுத்துக்கொண்ட விடயம் " தமிழும் கலையும் நம்மிரு கண்கள்"

நமது தாய்மொழி தமிழ் பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட பண்பட்ட மொழி. அமிழ்தினும் இனியது தமிழ்மொழி என்று பலமொழிகளைப் பயின்ற அறிஞர்கள் பாராட்டுகின்றார்கள். யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் என்றார் மகாகவி. உலகிலேயே முதல் முதலில் தோன்றிய மூத்த மொழி தமிழேதான் என ஆராய்ச்சியார்கள் கண்டுபிடித்துள்ளார்கள். கணனித் தொடர்புகளுக்கும் இசைவான, இலகுவான மொழியும் தமிழே என்று அறிஞர்கள் இயம்புகின்றார்கள்.
இவ்வாறு நமது தாய்மொழி பழமைக்குப் பழமையாக புதுமைக்குப் புதுமையாக என்றும் இளமையாக இருக்கிறது. அதனால் நமக்குப் பெருமையாக இருக்கிறது.

தமிழ் சமூகம் உலக அளவில் உச்சத்தை தொட்டதற்கு தமிழ்ப் பண்பாட்டின், கலாசாரத்தின் அடிப்படை ஆணிவேராக இருந்தது தமிழரின் கலைகளாகும். வாழ்வியலின் ஒவ்வொரு நிலையிலும் கலை இடம் பெறுகிறது. இதன்மூலம் நம்மையும், நம்மைச் சார்ந்தவரையும், நாம் வணங்கும் தெய்வத்தையும் மகிழ்ச்சிப்படுத்த கலைகளை பயன்படுத்துகிறோம். இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை. ஆனால் இசைக்கு தெய்வமும் இறங்கி வரும் என்பது நமது கலையின் சிறப்பு.

தமிழினதும் கலையினதும் சிறப்பினை முழுதாக அறிந்துகொண்டதால், தமிழும் கலையும் நம்மிரு கண்கள் என்ற தாயக மந்திரத்தை தனதாக்கிக் கொண்டது மேற்கு லண்டன் தமிழ்ப் பாடசாலை. 42-வருடங்கள் மட்டுமல்ல பிரபஞ்சம் இருக்கும்வரை தமிழும் கலையும் நம்மிரு கண்கள் என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி. வணக்கம்.

# சுப்பிரமணிய பாரதியார்

10 - 12 வயது (01.09.2007 - 31.08.2009)

எல்லோருக்கும் வணக்கம். இன்று நான் உங்கள் முன்னிலையில் பேச எடுத்துக்கொண்ட விடயம் " சுப்பிரமணிய பாரதியார்; "

தமிழ்நாட்டில் எட்டயபுரத்தில் பிறந்த சுப்பிரமணி . ஏழு வயதில் கவிதைகள் எழுதத் தொடங்கினார். தன்னுடைய பதினொரு வயதில் கவிபாடும் ஆற்றலை வெளிப்படுத்தினார், இவருடைய கவிப்புலமையை பாராட்டிய எட்டயபுர மன்னர், இவருக்கு "பாரதி" என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவர் "சுப்பிரமணிய பாரதியார்" என அழைக்கப்பெற்றார்.

மீசைக் கவிஞன்' 'முண்டாசு கவிஞன்' தேசிய கவிஞர், புரட்சிக் கவிஞர் என்றும் தமிழ் இலக்கிய உலகம் போற்றும் பாரதியார், தாய்மொழியாம் தமிழ்மொழி மீது அளவுகடந்த பற்றுக்கொண்டு, "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று போற்றி பாடியுள்ளார்.

தமிழ்க் கவிதையால் தேசபக்திக் கனலைச் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்ததோடு, அரசியல், தத்துவம், ஆன்மீகம், சமூகம், காவியம் என அக்கவி நுழையாத துறையே இல்லை எனலாம்.! ஆங்கிலம், வடமொழி, பிரெஞ்சு போன்ற பல மொழிகளின் ஞானம் கொண்டு தமிழ் மொழியின் கவிதைகளுக்கு வல்லமை கூட்டினான் பாரதி என்றால் அது மிகையாகாது. பாமர மக்களும் படித்துப் பொருள் புரியும் வகையில் அறிவுக் கவிதைகளை அழகு தமிழில் அளித்த கவிஞர் இனிய எளிய கவிதைகளால் புரட்சியையும், எழுச்சியையும், மலர்ச்சியையும் ஏற்படுத்தியவர் இன உணர்ச்சி, மொழி உணர்ச்சி, சுதந்திர உணர்ச்சி, தாய் நாட்டு உணர்ச்சி என்று கணக்கிலடங்கா உணர்ச்சிக் கவிதைகளைப் புனைந்து, தமிழன்னைக்குச் சூட்டி மகிழ்ந்தவர்.

தேசப் பற்றும், தமிழ்ப் பற்றும், கடவுள் பற்றும் நிரம்பி வழிந்த பெரும் புலவர் இவர். "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா" என்று தமிழ்ப் புலவர்களைப் பாட வைத்த பெரும் புலவன் எங்கள் பாரதி. மட்டுமே என்று கூறிக்கொண்டு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்

நன்றி. வணக்கம்

**கற்பிக்கப்படும் பாடங்கள்:-**

- ♦ தமிழ்மொழி ♦ சைவசமயம் ♦ வாய்ப்பாட்டு (சங்கீதம்)
- ♦ பரதநாட்டியம் ♦ வீணை ♦ மிருதங்கம்
- ♦ வயலின் ♦ புல்லாங்குழல் ♦ சுரத்தட்டு (Clasical, & Western)

## வகுப்பு நேரங்கள்

- ➢ 09.00 - 10.30 தமிழ்மொழி
- ➢ 10.30 - 11.00 இடைவேளை
- ➢ 11.00 - 12.20 சைவசமயம்
- ➢ 11.00 – 13.40 நுண்கலைப்பாடங்கள்

<u>**தன்னம்பிக்கை**</u>

12 - 14 வயது (01.09.2005 - 31.08.2007)

அனைவருக்கும் எனது அன்பு கலந்த முதல் வணக்கம். இன்று எனக்காக கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்பு “ தன்னம்பிக்கை”

நாம் அனைவருமே எடுத்துக் கொண்ட காரியத்தில் வெற்றி பெற வேண்டும் என்றே விரும்புகிறோம். ஆனால், அனைவராலும் வெற்றி பெற முடிவதில்லை. இந்தக் காரியத்தில் ஏன் நம்மால் வெற்றி பெற இயலவில்லை, என்று பலரும் யோசிப்பதில்லை. மாறாக, அவ்வளவு தான் நம் விதி என்று விட்டுவிடுகிறோம்.

நாம் எடுத்துக் கொண்ட காரியத்தில் வெற்றி பெற, ஆசையுடன் விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் தேவை. அந்த நம்பிக்கை,” என்னால் நிச்சயம் இந்த காரியத்தை முடிக்க இயலும்” என்ற மனஉறுதியுடன் அமைய வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே நீங்கள் திறமை உள்ளவராக இருந்தாலும் கூட உங்களால் வெற்றி பெற இயலும். வாழ்க்கை பிடிக்கவில்லை என வெறுத்து விடாதீர்கள்.

வாழும் வாழ்க்கைக்கு உங்களை விரும்ப கற்றுக் கொடுங்கள். கோடிக் கணக்கான கற்பனைகள் லட்சக்கணக்கான முயற்சிகள் ஆயிரக்கணக்கான தோல்விகள் இருந்தாலும் ஒரு சில நிஜங்களுடன் நாம் வாழ்கிற நிஜத்துக்கு பெயர்தான் வாழ்க்கை. வெளிநாட்டு வாழ்க்கையும் ஒரு எரியும் மெழுகுவர்த்தி போல்தான். தூரத்தில் இருந்து பார்த்தால் ஒளி மட்டும் தெரியும் அருகில் சென்று பார்த்தால், துன்பம் மட்டும் தெரியும். இருப்பினும் நம்பிக்கையுடன் வாழ்கின்றார்கள்,

இழந்தவை எதுவாயினும் அதை விட சிறந்தது கிடைக்கும் என்பது நம்பிக்கை, கிடைத்தது எதுவாயினும் அதுவே சிறந்தது என்று எண்ணுவது தன்னம்பிக்கை., நமக்கு எப்போதும் கை கொடுப்பது நம்பிக்கை. வெற்றியின் முதல் இரகசியம் தன்னம்பிக்கை. வெற்றி பெற்ற மனிதர்களின் வாழ்க்கையை புரட்டிப்பார்த்தால், வெற்றிக்கு முதல் மூலதனமாக இருப்பது தன்னம்பிக்கை ஆகும். தன்னம்பிக்கை உடையவன் எதிலும் எளிதாக வெற்றி அடையமுடியும். இமாலய சாதனைகளை கூட அவர்களால் வெல்லமுடியும்.

இதுவரை என் பேச்சைக் கேட்ட அனைவருக்கும் நன்றி. வணக்கம்

---









# <u>தமிழ்ப் பண்பாடு</u>

14 - 16 வயது (01.09.2003 - 31.08.2005)

அனைவருக்கும் எனது அன்பு கலந்த முதல் வணக்கம்.
எனக்காக கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்பு "தமிழ்ப் பண்பாடு"

கலை, கலாச்சாரம், வழிபாட்டு முறை. பேசும் மொழி, அணியும் ஆடை, உண்ணும் உணவு, வாழும் முறை என்பன எமது பண்பாட்டை வெளிப்படுத்தும் வாயில்களாகக் கருதப்படுகின்றன.

மொழி பண்பாட்டின் ஒரு அடிப்படையான அம்சமாகும். மொழியின் சிறப்பை அறிஞர் பெருமக்கள் வியந்து போற்றுகின்றனர். தமிழர் பண்பாடு இலங்கையிலும் இந்தியாவிலும் மட்டுமல்ல, இன்று உலகளாவிய ரீதியிலும் சிறப்பாகப் பேசப்படுகின்றது.

நாம் குடியேறிய சகல நாடுகளிலும் எமது பாரம்பரிய பண்டிகைகளைக் கொண்டாடுகின்றோம் கவின் கலைகளையும் வளர்க்கின்றோம். கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் என்பதை வேதமந்திரமாக கொண்டு நாம் வாழும் நாடுகளில் கோயில்களைக் கட்டி உற்சவங்கள் செய்து கோலாகலமாகக் கொண்டாடுகின்றோம்.

"ஆள் பாதி ஆடை பாதி" என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. ஒருவன் அணிந்திருக்கும் ஆடை அவனது கௌரவம் மரியாதை என்பவற்றை எடுத்து இயம்பும். வேட்டி, சேலை, பாவாடை, தாவணி என்பன தமிழரின் பண்பாட்டுக்கலாச்சார உடைகள். அவை இன்று மேல் நாட்டவரையும் கவர்ந்துள்ளது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் மிகவும் முக்கியமானது உணவு. எதை, எப்பொழுது, எப்படி உண்ண வேண்டும் என்பதை பண்பாடுதான் கற்றுக் கொடுக்கிறது. கையினால் உண்ணுதல், தரையில் அமர்ந்து உண்ணுதல், இறைவனுக்கு அர்ப்பணித்தபின் உண்ணுதல், விருந்தோம்பல், மறைந்த முன்னோர்களுக்கு படையலிடுதல் தமிழ்ப் பண்பாட்டின் மிகச் சிறந்த அம்சமாகும்

எமது வாழ்வியல் அழகுகளை தமிழ்ப் பண்பாடு என்ற தலையங்கத்தின் ஊடாக கூற எனக்கு வாய்ப்புக் கிடைத்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்ப் பண்பாட்டை மேலைத்தேய நாகரிகத்தினுள் மூழ்க விடாமல் தடுப்பது என் போன்ற சிறுவர்களின் மிகப் பெரிய கடமையாகும்! என்று கூறிக்கொண்டு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்

வாழ்க தமிழ்! வளர்க எம் பண்பாடு

நன்றி. வணக்கம்.



எமது பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், தங்கியிருந்து பிள்ளைகளை அழைத்துச் செல்வதற்கும், கலந்துரையாடுவதற்கும் வசதியாக சிற்றுண்டிச்சாலை/ தேநீர்ச்சாலையுடன் கூடிய பொழுதுபோக்கு மண்டபம் உள்ளது

## இயற்கை எனும் இறைவனின் கொடை

16+ (01.09.2003 இற்கு முன் பிறந்தோர்)

தாயே தமிழே வணக்கமம்மா! தரணியிலே எங்களைக் காத்திடம்மா!

இயற்கை மனிதனுக்கு வாழ்வளிக்கிறது. வாழ்க்கையினைக் கற்றுக்கொடுக்கிறது. இயற்கையில்லையென்றால் மண்ணில் ஈரமில்லை, விளைச்சலில்லை, மனித வாழ்க்கை இல்லை. ஏன் உயிரினங்களேயில்லை. உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழும் வாய்ப்பை வழங்கி வருவது இயற்கை. இதனை மிகத் தெளிவாய் உணர்ந்ததால் தான் பழங்காலத்து மக்கள் தங்களின் வாழ்வை இயற்கையோடு இணைத்தே வாழ்ந்தார்கள். அவர்களின் வாழ்வு இயற்கையோடு இரண்டறக் கலந்திருந்தது. இயற்கையை அவர்கள் நேசித்தார்கள் காத்தார்கள்.

இயற்கையே செயற்கைக்கும் அடிப்படை ஆகின்றது. இயற்கை இல்லாவிட்டால் செயற்கை இல்லை. செயற்கை இன்றியும் இயற்கை நிகழும். நடுவோரும் நீர்ப் பாய்ச்சுவோரும் இன்றி மரங்கள் பல வளர்ந்து தொகுதியாகக் கனியளித்து நிற்கும்போது, அதை இயற்கைச் சோலை என்கிறோம். அதை ஒத்த அல்லது விஞ்சிய சோலையொன்றை மனிதன் உருவாக்கும்போது அது செயற்கைச் சோலை ஆகின்றது. செயற்கை சோலையை ஆக்கிய மரங்களும் கனிகளும் இயற்கையே. செயற்கை அமைப்பில் இயற்கை பொலிகின்றது.

மன்னும் இமய மலையெங்கள் மலை என்றான் பாரதி காலச்சூழலில் இயற்கையின் மாற்றங்களாலும் சீற்றங்களாலும் மனித இனம் அழிந்த கதையும் நடந்து கொண்டிருக்கிறது. மனிதன் எப்போது இயற்கையோடு இயைந்த வாழ்வுக்குத் தன்னைத் தயார்படுத்துகிறானோ அப்போது முதல் இயற்கையால் மனிதனுக்கு ஏற்படும் துன்பங்களும் குறையும்.

பூமியின் முகமெங்கும் பசுமை பூக்கச் செய்து புவியை பசுமையின் தாயகமாக்கும் பணியில் ஒவ்வொரு மனிதனும் இணைய வேண்டும். எவனொருவன் நாளைய சமூகத்திற்கு நல்ல சூழலை உருவாக்கிக் கொடுக்கிறானோ.... அவனே எதிர்காலத்திற்கான தலைசிறந்த அடையாளம். என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி. வணக்கம்.

**பாடசாலையின் வருடாந்த நிகழ்வுகள்**

வாணி விழா, நத்தார் விழா, தைப்பொங்கல், பரிசளிப்பு (ஆண்டு) விழா விளையாட்டுப் (மெய்வல்லுனர்) போட்டி, திருக்குறள் மனனப்போட்டி நாவன்மைப்போட்டி, கோடைச் சுற்றுலா, தமிழ்ப்பாட தவணைப்பரீட்சைகள், நுண்கலைப் பாடங்களுக்கான தவணைப்பரீட்சைகள், OFAAL Exam Board பரீட்சை. பட்டமளிப்புவிழா ஆகியன.

எமது பாடசாலை Cambridge பல்கலைக் கழகத்தால் GCE O/L, GCE A/L தமிழ்ப் பரீட்சைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஓர் பாடசாலையாகும் /பரீட்சை நிலையமாகும்

# <u>சிக்கனமும் சேமிப்பும்</u>

(பெற்றோர்கள்)

மனித வாழ்வின் மேன்மை அறத்தால் நிர்ணயக்கப்பட்டு இருந்தாலும், அதன் அடிப்படை பொருளால்தான் அமைந்திருக்கிறது, என்பதை "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று திருவள்ளுவரும் "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற ஔவைப் பாட்டியின் வாக்குகளுக்கேற்ப, மனிதன் தேனீயாய் பறந்து, எறும்பாய் ஓடி பணத்தை சம்பாதிக்கின்றான். பணத்தின் முக்கியத்துவம் அதை ஈட்டுவதைவிட அதை எப்படி செலவு செய்கிறோம் என்பதில்தான் இருக்கிறது. செலவு செய்வதில் நான்கு நிலைகள் உண்டு. அவை சிக்கனம். கஞ்சத்தனம். ஆடம்பரம், ஊதாரித்தனம் ஆகும். நம் அன்றாட வாழ்க்கைக்கு தேவையில்லாத செலவுகளை நீக்கிவிடுவது தான் சிக்கனம். சிக்கனம், சேமிப்பாய் மாறும். சேமிப்புதான் சிக்கனத்தின் அடித்தளம். வியர்வை சிந்தியும், இரவு பகலாக தனக்காக வாழாமல் உழைத்து சேர்க்கும் பணத்தை வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லவழியில் பயன்படுத்த வேண்டும்.

நம்மைச் சுற்றியுள்ள சிறு உயிரினங்கள் கூட எதிர்காலத் தேவைக்கு சேமிக்கப் பழகுவது உண்டு. அதில் தேனீயும், எறும்பும் கண்முன்னே தெரிகின்ற அற்புதங்கள்.

மழையின் போது விழும் அருவி குளத்தில் சேமிக்கப்படுவதும், விளைச்சலின் ஒரு பகுதியை தங்களின் வாழ்விற்காக சேமிப்பதும். நேரத்தை திட்டமிட்டு செலவிடுவதும் சேமிப்பேயாகும். இவ்வாறு ஒரு குடும்பத்தில் மேற்கொள்ளும் சிக்கனம் தனிமனித வாழ்வில் மட்டுமல்லாமல், தேசத்தின் வளர்ச்சியிலும் அது துணைநிற்கும். பல்துலக்கும் வேப்பங்குச்சியை கூட சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமென்றார் மகாத்மா காந்தி. நித்தமும் தனது நாட்குறிப்பில் தனது செலவுகளை எழுதிவைத்து அதில் தேவையற்ற செலவுகளைக் குறைப்பவர்கள் சிறந்த குடிமகன்களுக்கு எடுத்துக்காட்டு. புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொண்டதைப்போல செல்வந்தர்களைப் பார்த்து அளவுக்கதிகமாகச் செலவு செய்தால் கடனாளியாவது உறுதி.

நமது வருவாய் அதிகமாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை. செலவு அதிகமாகப் போய்விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என எச்சரிக்கிறார் திருவள்ளுவர். அதையும் மீறி செலவு செய்தால் எத்தனை நல்ல பண்புகள் இருந்தாலும் அவற்றை ஒவ்வொன்றாய் இழக்க நேரிடும். பொதுவாக உழைப்பவனுக்குத் தான் பொருளின் அருமை தெரியும் அதனால் அவரிடம் சிக்கனம் காணப்படும்.

ஆடம்பரமான செலவு என்ற மனோநிலையை மாற்றி தேவைக்கேற்ப செலவு என்ற மனோநிலையைக் கையாண்டால் சேமிப்பது நிச்சயம். இதையும் மீறி கடனில் வாழ பழகிவிட்டால் எதிர்காலத்தில் பல்வேறுபட்ட சிக்கல்களுக்கு ஆளாகவேண்டியிருக்கும். "கடன் வாங்குபவனாகவும் இருக்காதே, கடன் கொடுப்பவனாகவும் இருக்காதே. ஏனெனில் அது நண்பனையும், பணத்தையும் இழக்கச் செய்வதோடு குடும்பத்தின் சீர்மையையும் மழுங்கடிக்கச் செய்யும்" என்கிறார் ஷேக்ஸ்பியர்.

சிறு வயதிலிருந்தே, குழந்தைகளை சேமிக்கப் பழக்கி, அவர்களின் சேமிப்பினை எதிர்பாராத தேவைகளுக்கு அவர்களையே பயன்படுத்தி மகிழச் செய்வதன் மூலம், ஒளிமயமான குடும்பங்களை உருவாக்கலாம். "சிக்கனம் வீட்டைக் காக்கும், சேமிப்பு நாட்டைக் காக்கும்" என்ற பொன்வரிகளுக்கு ஏற்ப வாழ்வோம்.

நன்றி. வணக்கம்.